சார்பு நீதிமன்றம், பத்மனாபபுரம்
முன்னிலை: திரு. K. மாரியப்பன், பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி
2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07-ம் நாள் செவ்வாய்கிழமை

**<u>மேல்முறையீட்டு வழக்கு எண் 10/2021-ல் உள்ள</u>**

**<u>இ.ம.எண் 3/2025</u>**

1. ரசல் ( இறப்பு)
2. அமிர்தபாய் ... மனுதாரர்

/எதிர்/

1. மாவட்ட ஆட்சியர்
கன்னியாகுமரி மாவட்டம்
நாகர்கோவில்

2. சுகாதாரத்துணை இயக்குநர்
கிருஷ்ணன் கோவில்
வடசேரி, நாகர்கோவில்

3. நிர்வாக அதிகாரி
பாலப்பள்ளம் நகர பஞ்சாயத்து
பாலப்பள்ளம் அஞ்சல் ... எதிர்மனுதாரர்கள்

இந்த மனு 24.02.2024 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. பத்மாசனன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. T. சந்தோஷ்குமார் அவர்கள் ஆஜராகியும். இருதரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையின் கீழ் இருந்து வந்த பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்:

**<u>உத்தரவு</u>**

மனுதாரர் இம்மனுவை பிரிவு 41 விதி 27 உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டத்தின் கீழ் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்ள கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

<u>**மனுதாரர்களின் மனுச்சுருக்கம்**</u>

மனுதாரர்/மேல்முறையீட்டாளர் அசல் வழக்கை பி பட்டிகை சொத்தின் சுவாதீனத்தை திரும்ப பெறவும் ஏ பட்டிகை சொத்திற்கு சென்று வர பாதை வசதி உரிமை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்திருந்த நிலையில், நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் பாதை இல்லை. I.H என்ற பகுதியில் காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டு கேட் அமைக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது என்றும், ஏற்கனவே தாவா சொத்து தொடர்பாக முன்னர் ஏற்பட்ட அசல் வழக்கு 248/86 ன் மீது 2வது மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு S.A.No. 1408/2003 என்ற வழக்கில் 29.04.2024ம் தேதி 8 அடி பாதை உள்ளது என்று இரு தரப்பும் ஒப்புக்கொண்டு தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே S.A.No. 1408/2003 ன் தீர்ப்பு இவ்வழக்கை தீர்மானிக்க அவசியமாக இருப்பதால் இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர் உரை சுருக்கம்**</u>

மனுதாரர் யூகத்தின் அடிப்படையில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீடு வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

4. <u>**பிரச்சனை**</u>:-

இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கை பி பட்டிகை சொத்தில் பிரதிவாதிகள் ஆக்ரமிப்பு செய்துள்ள பகுதியை மட்டும் சுவாதீனம் பெறவும் ஏ பட்டிகை சொத்தில் செல்ல பாதை உரிமை பரிகாரம் கேட்டும் தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் S.A.No. 1408/2003 என்ற வழக்கின் தீர்ப்பு இவ்வழக்கை தீர்மானிக்க முக்கியமான ஆவணம் என குறிப்பிட்டுள்ளார். இரு தரப்பு வாதுரைகளும் கவனமாக பரிசீலனை செய்த போது, இம்மனுதாரர்களின் முன்னோர்கள் அரசுக்கு ஆரம்ப

சுகாதார நிலையம் அமைப்பதற்கு நிலம் தானமாக வழங்கியுள்ளார்கள். ஏ பட்டிகை சொத்தை சென்றடைய I.H என்ற பகுதியின் வழியாக பாதை உள்ளது என்று நீதிமன்ற ஆணையர் தனது சி1, சி2 அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். மனுதாரர்களின் முன்னோர்களுக்கு சொத்து பாத்தியப்பட்டிருந்த படியால் தான் அரசுக்கு சொத்து தானமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த விவரம் எதிர்மனுதாரரால் அசல் வழக்கில் ஆட்சேபனையாக தெரிவிக்கப்படவில்லை. இரு தரப்பிலும் பிரச்சினைகளை முழுமையாக முடிவு கொண்டு வர ஏதுவாக நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் பரிசீலித்து பார்த்தால் தான் இவ்வழக்கின் முழுமையும் இறுதியாகத்தான் தீர்மானிக்க முடியும். இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித ஈடு செய்ய முடியாத இழப்பும் ஏற்படபோவதில்லை. இம்மனுவை தள்ளுபடி செய்துவிட்டால் மனுதாரர்களுக்கு அவர்கள் தரப்பு சாட்சிய சான்றாவணங்களை அஜர்படுத்த இயலாமல் போய் அவர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும். எனவே இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07–ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
பத்மனாபபுரம்.

<u>இணைப்பு :–</u>

– இல்லை –

சா.நீ,

பத்மனாபபுரம்